வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# தமிழரின் சிறு தெய்வ வழிபாடு

**த. ஐஸ்வர்யபிரதினா**
Diploma in Arch, Epigraphy, Manuscripts,
International Institute of Tamil Research Centre,
Taramani, Chennai - 600113.
aishwaryaprathina@gmail.com / 9940118327

முன்னுரை:

அடிப்படையாகக் கொண்டு குலதெய்வ வழிபாடு, ஊர் தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு, பெரு தெய்வ வழிபாடு என நான்கு நிலைகளில்வகைப்படுத்தினர். இவற்றில் சிறு தெய்வ வழிபாடு என்பது ஒரு பழங்கால வழிபாட்டு முறையாகும். இது இயற்கை கிராமப்புற வாழ்க்கை மற்றும் சமூக அமைப்புகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது.

இந்த வழிபாட்டில் பல்வேறு தெய்வங்கள் மற்றும் சடங்குகள் அடங்கும். மனிதனாகப்பட்டவன் தன்னுடைய வாழ்வில் ஒழுக்கத்துடனும் நடுநிலைமையுடனும் வாழ்வதற்கு பண்பாடு என்பது மிகவும் அவசியமான ஒன்றாகிறது. இத்தகையப் பண்பாட்டுச் சிறப்பின் முதல் கூறு சிறு தெய்வ வழிபாடு ஆகும்.

எல்லா மதங்களுக்கு பொதுவான இவ்வழிபாடானது இறைவனுக்கும் மனிதனுக்கும் ஒரு தொடர்பினைஏற்படுத்துகிற வகையில் அமைந்துள்ளது. தமிழ்ல வாழ்வியலோடு பிணைந்து இருக்கின்ற இறை உணர்வு பண்பின் வாயிலாக தமிழரின் சிறு தெய்வ வழிபாட்டை ஆகிறது இக்கட்டுரை.

வழிபாடு:

"வழிபடு" என்பதிலிருந்து பிறந்தது"வழிபாடு" என்னும் சொல். வழிபாடு என்ற சொல்லுக்கு வணக்கம், கோட்பாடு, பூசனை, பின்பற்றுதல், வழக்கம் என பல பொருட்கள் இருப்பினும் கடவுளையோ உயிர் இல்லாதவற்றையோ உயிர் உள்ளவற்றையோ வாயால் மனதால் வழிபடுவதே வழிபாடு என தமிழ் அகராதியில் விளக்கம் தருகிறது.

குறிப்பிட்ட ஒரு வெற்றிடத்தைவழிபடல், உருவத்தை வழிபடல், நடுகளை வழிபடல், என வழிபாட்டில் பல நிலைகள் இருந்து வருகின்றன.மனிதனின் அச்ச உணர்வும் குற்ற மனப்பான்மையுமே வழிபாடு தோன்ற காரணம் எனலாம்.

இயற்கையானது இடி, மழை, புயலின் வாயிலாக மனிதனுக்கு அச்சமூட்டியது. தான் செய்த குற்றமே இயற்கையின் சீற்றத்திற்கு காரணம் என்று நம்பிய மனிதன் அவற்றையே வணங்கத் தொடங்கினான். அது அவனுக்கு ஆறுதலையும் நம்பிக்கையையும் ஊட்டியது. மேற்கண்ட கருத்துகளின் வழி "உயர் நிலையான ஒன்றை உள்ளதால் நெருங்கவும் உணர முற்படவும் மேற்கொள்ளப்படும் வழிமுறைகளே வழிபாடு" என்று தெளிவு பெறலாம்.

**வழிபாட்டின் வளர்ச்சி**:

வழிபாடு வழிபடுவோரின் வாழ்க்கை முறையில் இருந்து எழுகின்றன. ஒரு சமுதாயம் அதன் உணவு உடை உரையுள் ஆகிய புற வாழ்க்கை தேவைகளை எந்த முறையில் பெறுகிறதோ அதற்காக எத்தகைய சமுதாய அமைப்பை உருவாக்கிக் கொண்டுள்ளதோ அந்த அமைப்பின் அடிப்படையின் மீது தெய்வ நம்பிக்கை என்று மேற்கோப்பு எழும் (ஏங்கல்ஸ்) என்பவர் நா. வானமாமாலை (பழங்கதைகளும், பழமொழிகளும்ப.80) வழிபாட்டின் வளர்ச்சி நிலையாக நான்கு நிலைகளைக் கூறலாம்.

1.) இயற்கை வழிபாடு (Nature worship)

2.) மர வழிபாடு (Tree worship)

3.) போலி உரு வழிபாடு (Fetishim)

4.) முன்னோர் வழிபாடு (Ancestral worship)

இவை நான்கும் தொடக்க கால வழிபாடுகளாக விளங்குகின்றன.

1.) இயற்கை வழிபாடு :மனிதன் தாம் வாழ உறுதுணையாக இருக்கும் இயற்கைக்கு நன்றிசொல்லும் வகையில் அமைவது இயற்கை வழிபாடாகும்.பஞ்சபூதங்களை (நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம்) மனிதன் தம் ஆற்றலுக்கு மேலாக நினைத்து வழிபடத் தொடங்கினான்.

2.) மர வழிபாடு:மரங்கள் இயற்கை சூழலுக்கும் மனித வாழ்வியலுக்கும் பெரிதும் உதவுகிறது. நீர், நிலம், நெருப்பு ஆகியவை இல்லாமல் கூட மனிதன் ஒருவனால் ஓரிரு நாட்கள் வாழ முடியும் ஆனால் சுத்தமான காற்று இல்லாமல் மனிதன் ஒருவனால் ஒரு

கணமும் வாழ இயலாது.அத்தகைய காற்றை தூய்மையாகவும் மனிதன் சுவாசிக்கும் வகையில் வைத்திருக்க பெரிதும் உதவுகிறது மரங்கள். அத்தகைய மரங்களை காக்கும் பொருட்டு இறைவனுக்கு உகந்த மரங்களாக மாற்றி திருக்கோவில்களில் தலவிருட்சமாக இன்றும்வழிபட்டு வருகின்றார்கள் நம் மக்கள்.

3.) போலி உரு வழிபாடு:மனிதர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் பொருட்களை வழிபடுவது அல்லது உயிரற்ற பொருட்களைஇறைவனோடு ஒப்பிட்டு வழிபடுவது போலி உரு வழிபாடாகும். உதாரணமாக கந்து வழிபாடு, வேல் வழிபாடு, சூல வழிபாடு, கரக வழிபாடு, குதிரைஎடுப்பு, அரிவாள் வழிபாடுகள் ஆகும்.

4.) முன்னோர் வழிபாடு:தமக்கு முன் வாழ்ந்த பெரியோர்கள் வாழ்க்கையை எவ்வாறு வாழ வேண்டும் என்பதையும் வாழும் முறைகளையும் கற்றுத் தந்ததற்காகவும் அவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையில் வணங்கத் தொடங்கினார்கள். தம் குளத்தைக் காத்து போரில் மாண்ட முன்னோர்களுக்கு நடு கல் எடுத்தும் வழிபாடு செய்தனர்.

சிறு தெய்வ வழிபாடு:

சிறுதெய்வ வழிபாடு என்பது இயற்கை வணக்கத்தில் இருந்து தோன்றியிருக்க வேண்டும்.இயற்கை வழிபாடு சங்க காலத்தில் இருந்து வந்ததை சங்க பாடல் வழி அறிய முடிகிறது. சங்க இலக்கியத்தில் தெய்வ வழிபாட்டினை பெருதெய்வம் என்றே குறிப்பு உள்ளது. இடைக்காலத்தில் வந்த பக்தி இலக்கியத்தில் "சிறு தெய்வம்"என்ற சொல் இடம் பெறுகிறது. சிறு தெய்வ வழிபாடு குறித்து,

"இரு நிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை
சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்"

— ( திருநாவுக்கரசர், தேவாரம் மறுபிற்றத் திருத்தாண்டகம், ப.5)

தேவாரப் பாடலில் திருநாவுக்கரசர் சிறுதெய்வத்தினை கூறுகிறார்.இதே கருத்தினைஇராமலிங்க அடிகள், "நலிவுறு சிறு தெய்வம்" (இராமலிங்கர், திருவருட்பா பிள்ளை சிறுவண்ணப்படம்ப.59) என விளக்கம் தந்துள்ளார். இவ்விரு அடியார்களும் சிறு தெய்வம் என்ற சொல்லினை பயன்படுத்தி இருக்கின்றார்கள். சங்க இலக்கியங்களில் சிறு தெய்வம் என்ற சொல் காணப்படவில்லை. பெரு தெய்வம் என்ற சொல்லை காண முடிகிறது. பெரு தெய்வத்தினை,

"விறுவிறு கடுந்திறல் இரு பெருந் தெய்வத்து

உருவுடன் இயைந்த தோற்றம் போல"— (அகம் 360: 6-7)

என்று அகநானூறு விளக்கம் தருகின்றது. இதேபோன்று பெருதெய்வம் என்ற சொல்லின் குறுந்தொகை(263: 3-4), புறநானூறு (58:10), திருமுருகாற்றுப்படை அடி 160 இவற்றுள் வந்துள்ளது. தீபம் என்று குறிப்பிடாமல் பெரு தெய்வம் என குறிப்பிடுவதால் சிறு தெய்வம் இருந்ததாக பொருள் கொள்வதாகும். சிறு தெய்வங்கள் என்பது மக்கள் தங்களது விருப்பமான வழிபாட்டிற்காக உருவாக்கியதாகும். சிறு தெய்வம் என்பது நமது முன்னோர் வழிபாடாக ஏற்றுக் கொள்ளலாம்.

வழிபடும் முறை:

பொதுவாக நில உடமை சமூகம் அமைப்பில் உள்ள அனைத்து பிரிவினரும் இச்சிறு தெய்வ வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். மேலும் சிறு தெய்வங்கள் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் ஆயுதங்களை ஏந்தி இருப்பது இவற்றின் பொதுப் பண்பாகும். எனவே இச்சிறு தெய்வங்கள் அனைத்தும் வீர வழிபாட்டு தெய்வங்களாக கருதப்படுகின்றன.

மேலும் இத்தகைய சிறு தெய்வ வழிபாடுமுறையில் தெய்வங்களுக்கு செய்யப்படும் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் எந்தவித ஆகம விதிகளுக்கும் உட்படாத வண்ணம் கிராம மக்களின் விருப்பத்திற்கு ஏற்றார் போல் காலம் காலமாக செய்யப்பட்டு வருகின்றன.

இருப்பினும் இத்தகைய வழிபாட்டு முறைகள் ஒவ்வொரு தெய்வத்திற்கும் தகுந்தாற்போல் காலம் காலமாக செய்யப்பட்டு வருகின்றன.

குலதெய்வ வழிபாடுகளில் தெய்வங்களை அலங்கரித்தல், பூசை செய்தல், படையல் போடுதல், நேர்த்திக்கடன் செலுத்துதல், ஆடியும், பாடியும் துதித்தல் போன்றவை வழிபாட்டு முறைகளாக அமைகிறது.சிறு தெய்வங்களுக்கான வழிபாடு ஆண்டிற்கு ஒரு முறையோ 2 ஆண்டுக்கு ஒரு முறையோ 3 ஆண்டுகளுக்கு ஒரு முறையே நடைபெறும். இது பெரிய கும்பிடு, சாமி கும்பிடு, ஊர்த் திருவிழா, கொடை திருவிழா, பெரிய நோம்பி என்ற பல பெயர்களால் குறிப்பிடப்படும்.

பெரிய கும்பிடு வழிபாடு முறைகள்

ஆயத்த நிலை செயல்பாடுகள் வழிபாட்டு நிலை செயல்பாடுகள் நிறைவு நிலை செயல்பாடுகள் சாமி உத்தரவு கேட்டல் கரகம் எடுத்தல் பள்ளயம் பிரித்தல்

சாமி சாட்டுதல் சிலை எடுத்தல் சாமிப்பட்டியை கோயிலில் வைத்தல்

காப்பு கட்டுதல் சாமி பெட்டி தூக்குதல் வரவு செலவு பார்த்தல்

கம்பம் நடுதல் சக்தி கிடாய் வெட்டுதல்

முளைப்பாரி போடுதல் பொங்கல் வைத்தல்

வரிவசூல் செய்தல் நேர்த்திக்கடன் செலுத்துதல்

வேப்பிலை தோரணம் கட்டுதல் முளைப்பாரி எடுத்தல்

கலை நிகழ்ச்சிகள் மஞ்சள் நீராடுதல் சிலை அழைப்பு

(பள்ளயம் பிரித்தல் = கோயில் வழிபாட்டிற்கு வரி கொடுத்தோருக்கு செய்யும் மரியாதை.) இந்தப் படிநிலைகள் சிறு தெய்வ வழிபாடுகளில் தவறாது அமையும்.

சிறு தெய்வ வழிபாட்டில் பெண்:

இனக்குழு சமுதாயத்தின் தொடக்க காலம் தொட்டு செழுமையின் அடையாளமாகவும் வலிமையின் குறியீட்டாகவும் பெண் கருதப்பட்டதாலும், பெண் வணங்குவதற்கும் வழிபாட்டிற்கும் உரியவள்ஆனாள்.

பண்டைய தமிழ் இலக்கியங்களில் பெண் தெய்வப் பெயர்களும், பெண் தெய்வ வழிபாடுகள் பற்றிய குறிப்புகளும் நிறைந்து காணப்படுகின்றன. பெண்களை உடல்வளம், மனவளம், மகப்பேறு வளம், பயிர் வளம், ஆகியவற்றினைக் குறிக்கோளாக கொண்டுவணங்கப்படுகின்றன. அந்த வகையில் தமிழகத்தை பொறுத்தவரை கொற்றவை வழிபாடு ஆதி தெய்வ வழிபாடாக சிறப்பிக்கப்படுகிறது.

அதாவது வளம் சிறிந்த நிலங்களுக்கு ஆணை தெய்வமாக்கிவிட்டு வளம் குன்றிய பாலை நிலத்திற்கு கொற்றவை என்ற பெண்ணை தெய்வமாக்கி வழிபட்டனர். இதற்கு காரணம் வளமையில்லா நிலத்தையும் செழிப்புடன் மாற்றக்கூடிய ஆற்றல் பெண்ணுக்கு உண்டு என்பதன் அடிப்படையே என்று சொன்னால்அக்கருத்து ஏற்புடையதாக இருக்கும். இக்கரத்திற்குச் சான்றாக,

"மறங்கடைக் கூட்டிய குடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அகத்திணைப் புரனே.."

என்ற செய்யுளின் வழி கொற்றவையை தமிழ் மக்கள் வழிபட்ட நிலையினை அறிய முடிகின்றது. மேலும்,

"வெற்றிவேல் தடக்கை கொற்றவை அல்லள்.."என்ற சிலம்பின்பாடல் அடியின் மூலமாகவும் வெற்றி தரும் தெய்வமாக கொற்றவையை வழிபட்ட நிலை தெளிவாகிறது. இதனை உறுதிப்படுத்தும் விதமாக

"வென்று வேல் போர் கொற்றவை

....... சிறப்பிற் பிழையோள்"...

அதாவது இங்கு வெற்றி என்பது போர்க்களத்தில் வீரர்கள்பெறக்கூடிய வெற்றியைக் குறிக்கின்றது. மேலும் பழைய குறிக்கப்படுவதால் தமிழ் தெய்வங்களுள் கொற்றவையை காளி (அழல்) என்ற பெயரோடும் வணங்கி உள்ளனர்சங்க கால மக்கள்.

இதற்குச் சான்றாக "அழல் திகழ்ந்தமைக்கும் அஞ்சுவடு"என்ற வரிகள் இடம் பெற்றுள்ளன. மேலும் கொற்றவை, காளி, கடுகிழாள், என்று சங்ககால மக்களால் வணங்கப்பட்ட தெய்வங்கள் நாகரிக வளர்ச்சி மாற்றத்தினால் தற்போது துர்க்கை என்ற பெயர் கொண்டு வணங்கப்படுகின்றது. இதனை,

"விடர்முனக அடுக்கத்து விரல்கெழு சூலிக்குக்

கடனும் பூணாம்; கை நூல் யாவாம்...."என்று குறுந்தொகை பாடல் அடைகளால் அறிய முடிகின்றது.

முடிவுரை:

சிறு தெய்வ வழிபாட்டினை கடைப்பிடிப்பவர்கள் கிராமப்புறத்தில் வாழ்கின்ற பாமர மக்களே. இப்ப பாமர மக்களே சிறு தெய்வ வழிபாட்டின் முன்னோடிகள் என்று சொன்னால் அது மிகவும் ஏற்புடையதாக இருக்கும். மேலும் தனிமனித நோய், பயம் ஆகியவற்றினைத் தீர்க்கும் சக்தி இத்த தெய்வங்களுக்கு உண்டு என்ற நம்பிக்கை இம்ம மக்கள் இடையே நிறைந்துள்ளது. அது மட்டுமல்லாது இச்சிறு தெய்வ வழிபாடானது 300 வழிவகை பண்பாட்டினை பறைசாற்றுவதோடு, மக்களிடையே ஒற்றுமையை பலப்படுத்தும்ஒரு இணைப்புப் பாடமாகவும் அமைந்துள்ளது.

தமிழ் சமுதாயம் தெய்வ வழிபாட்டை தங்கள் கலாச்சார வளர்ச்சியின் கருவியாக கொண்டிருக்கின்றன. ஆகையால் தான் விஞ்ஞான உலகில் இன்றும் இவ் வழிபாடு பிரசித்தி பெற்று இருக்கின்றது. எனவே அவை மக்களின் வாழ்க்கையோடு இணைந்த பண்பாட்டின் ஒரு பகுதியாகவும், இறை உணர்வூட்டும் அற்புத சக்தியாகவும் திகழ்கின்றன.

துணைநூர் பட்டியல்:

1. IRJT — நீ. அகிலாண்டேஸ்வரி ஆய்வுக் கட்டுரை 109-113

2. IRJT — மூ கஜலட்சுமி, தமிழ்ஆய்வு கட்டுரை 117-183

3. தமிழ் இணைய வழிக் கல்வி-சிறு தெய்வ வகைபாடு
4. தமிழர் நாகரிகமும் பண்பாடும் முனைவர் தட்சிணாமூர்த்தி.
5. தமிழன்னல் - சங்க மரபு.